**CC. No. 2/2025** **PW 5** **07.11.2025**

சாட்சியின் பெயர் – சங்கரநாராயணன், த/பெ. ராமசாமி

குற்றப்பல்வகை மனு எண். 241/2025 ல் 19.09.2025 அன்று ஏற்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஆஜரானார். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சிலைகள் திருடு போனது பற்றி எனக்கு யார் தெரியவித்தது என்றால் பட்டாச்சாரியார் சிலைகள் திருடுபோய்விட்டது என்று கோவிலிலிருந்து வெளியே வந்த போது, அந்த சத்தத்தை கேட்டு நான் கோவிலுக்கு சென்றேன். நானும், ஊர் பொது மக்களும் கோவிலுக்கு உள் சென்று சாமி சிலைகள் காணாமல் போய்விட்டதா என்று பார்த்தோமா என்றால் 31.10.2012 அன்று பட்டாச்சாரியார் சிலைகள் காணாமல் போனதாக கத்தினார். அன்று நாங்கள் கோவிலுக்கு உள்ளே சென்று நாங்கள் பார்க்கவில்லை. மறுநாள் 01.11.2012 அன்று காலை 10.30 மணி முதல் 11.00 மணிக்குள் காவல் துறைனர் உள்ளே சென்றவுடன் நானும், ராஜ்குமார் மற்றும் 4 – 5 பேர் உள்ளே சென்று போய் பார்த்தோம். காவல் துறையினர் 01.11.2012 அன்று காலை 11.00 மணிக்கு சம்பவ இடமான கோவிலுக்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். காவல் துறையினர் வந்தவுடன் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் 01.11.2012 அன்று காலை 11.00 மணிக்கு காவல் துறையினர் கோவிலுக்கு சென்று சுற்றி பார்த்து பிறகு அங்கேயே உட்கார்ந்து வரைபடம் வரைந்து பிறகு எழுதிக்கொண்டார்கள், நாங்கள் அதில் கையொப்பம்யிட்டோம். நான் கோவிலுக்கு உள் செல்லும் போது கோவில் கதவுகளை பார்த்தேனா என்றால் இல்லை. கோவிலின் தாழ்பாள்களை நான் பார்க்கவில்லை

என்றால் சரிதான். பட்டாச்சாரியார் இந்து சமய அறநிலை துறைக்கு எழுத்து மூலமாக புகார் கொடுத்தாரா என்றால் 31.10.2012 அன்று புகார் கொடுத்தார். பட்டாச்சாரியார் இந்து சமய அறநிலை துறை அதிகாரிகளுக்க எவ்வாறு தகவல் தெரிவித்தார் என்றால் பக்கத்தில் உள்ள நபரிடம் செல்போன் வாங்கி தகவல் கொடுத்தார். இந்து சமய அறநிலை துறையில் எந்த அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் பந்தநல்லூரில் உள்ள அதிகாரிகள் வந்தார்கள். அதிகாரிகளின் பதவிகள் குறித்து எனக்கு தெரியவில்லை. அதிகாரிகள் எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் தகவல் தெரிவித்து அரை மணி நேரத்தில் வந்துவிட்டார்கள். இந்து சமய அறநிலை துறை அதிகாரிகள் யார் யாரை விசாரித்தார்கள் என்றால் கோவிலுக்குள் வந்து பார்வையிட்டு பின் பட்டாச்சாரியிடம் விசாரணை செய்து எழுதிக்கொண்டார்கள். மற்ற யாரை இந்து சமய அறநிலை துறை அதிகாரிகள் விசாரித்தார்கள் என்றால் மற்ற யாரையும் விசாரிக்கவில்லை. பட்டாச்சாரியார் அலைபேசியில் வேறு எந்த அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார் என்றால் தகவல் தெரிவித்த விவரம் மட்டுமே தெரியும், எந்தெந்த அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தார் என்று தெரியாது. பட்டாச்சாரியாரிடம் இந்து சமய அறநிலை துறை அதிகாரிகள் எப்போது புகார் பெற்றார்கள் என்றால் 31.10.2012 அன்று காலை 11.00 மணியளவில் புகார் பெற்றார்கள். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன். நான் கோவிலுக்குள் பார்த்ததாக சொல்லும் பட்சத்தில் என்னென்ன சிலைகள் காணாமல் போனது என்றால் ராமர், சீதை, லெட்சுமணன். மேற்கண்ட சிலைகள் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது என்றால் ஐம்பொன் சிலைகள் என்று சொன்னார்கள். பட்டாச்சாரியாரிடம் புகார் பெற்ற பின்பு செயல் அலுவலர் அன்றே காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தாரா என்றால் பட்டாச்சாரியாரிடம் புகார்

பெற்றுக்கொண்டு, செயல் அலுவலர் வேலையை முடித்துவிட்டு செல்வதற்கு இரவு நேரம் ஆகிவிட்டதால் மறு நாள் 01.11.2012 அன்று காலையில் இந்து சமய அறநிலை துறை அதிகாரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். உடனே காவல் துறையினர் வந்துவிட்டார்கள். நான் முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. நான் காவல் துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்தில், குற்ற எண் மற்றும் சட்டப்பிரிவுகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை படிக்காமல் சட்டப்பிரிவை நான் குறிப்பிட முடியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பார்வை மகஜர் காலை 11.00 மணியளவில் 01.11.2012 அன்று தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் துறையினர் என் முன்பு வரைபடம் தயார் செய்தார்கள் என்று நான் கூறும் பட்சத்தில் 01.11.2012 அன்று காலை 11.00 மணியளவில் தயாரித்தார்களா என்றால் ஆமாம். காவல் துறையில் உள்ள எந்த அதிகாரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியவற்றை தாயார் செய்தார்கள் என்றால் காவல் துறை அதிகாரி தயார் செய்தார், அதிகாரியின் பதவி தெரியவில்லை. எத்தனை மணிக்கு பார்வை மகஜர், வரைபடம் குறித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் 01.11.2012 அன்று காலை 11.30 மணியளவில் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். காவல் துறை அதிகாரிகள் எத்தனை மணிக்கு வந்து எத்தனை நபர்களை விசாரித்தார்கள் என்றால் 01.11.2012 அன்று காலை 11.00 வந்த காவல் துறையினர் சம்பவ இடத்தில் இருந்தவர்களை விசாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். காவல் துறையினர் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் என்னிடம் வாங்கவில்லை. காவல்துறையினர் தயார் செய்த பார்வை மகஜரில் நான் கையெழுத்து செய்தேனா என்றால் கையெழுத்து செய்தேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது

என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் போகவில்லை என்றால் சரியல்ல. பட்டாச்சாரியார் செயல் அலுவலரிடம் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. பட்டாச்சாரியார் தகவல் தெரிவித்த பிறகு இந்து சமய அறநிலை துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. செயல் அலுவலர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் புகார் மனு பெற்ற பிறகு சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்த பிறகு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் என்னையும், ராஜ் குமாரையும் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் தயார் செய்து வைத்திருந்த பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அவர்கள் எழுதி வைத்திருந்த வாக்குமூலத்தை என்னிடம் கொடுத்து என்னை படிக்க செய்து, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் கூறிய அனைத்து சங்கதிகளும் தவறு என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.07 18:01:42 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*